www.mailofislam.com

# இஸ்லாமிய வரலாறு

## அன்னை ஜுவைரியா ரழியல்லாஹு அன்ஹா



அன்னை ஜுவைரியா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புனித அடக்கஸ்தலம் - ஜன்னத்துல் பகீஃ, மதீனா

ஹாரித் பின் அபீ திரார் என்பவரே இவர்களின் தந்தை. முதலில் இவர்களுக்கு மஸாபிஃ பின் ஸப்வான் என்பவருடன் திருமணமானது. ஹஸ்ரத் ஜுவைரியா (ரலியல்லாஹு அன்ஹா) வின் தந்தையும் குடும்பத்தவரும் இஸ்லாத்தின் பரம விரோதிகளாய் இருந்து வந்தார்கள். ஹிஜ்ரி 5 ஆம் ஆண்டு மதீனாவுக்குப் படையெடுத்தும் வந்தார்கள். முறைஸீஃ என்ற ஸ்தலத்தில் யுத்தம் நிகழ்ந்தது. எதிரிகள் கலைந்தோடினர். முஸ்லிம்கள் வெற்றிப்பெற்றனர். அவ்யுத்தத்தில் பிடிப்பட்டவர்கள்தான் ஹஸ்ரத் ஜுவைரியா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள். மகளை விடுதலை செய்ய வேண்டுமென ஹாரித் வந்து கூற, கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்

அன்னவர்கள், “அதையிட்டு ஜுவைரியாவின் சொந்த அபிப்பிராயத்தை கேட்டுவிடக்கூடாதா?” என்றார்கள். அதை ஒப்புக்கொண்டு ஹாரித் தன் குமாரியைப் பார்த்து, “உமது அபிப்பிராயமென்ன? என வினவ, அவர்கள் “நான் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களின் சமூகத்திலேயே இருந்து என் வாழ்நாட்களைக் கழிக்க விரும்புகின்றேன்” என்றார்கள். பின்னர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அன்னவர்களுடன் விவாகம் நடந்தேறியது.

இவர்கள் துறவறம் பூண்டவர்போல் எளிய வாழ்க்கையைக் கைக்கொண்டார்கள். நல்ல அழகுடையவராகவும் நடுத்தர பருமனுடையவராகவுமிருந்தார்கள். இவர்கள் ஹிஜ்ரி 50 ஆம் ஆண்டில் தங்கள் 65 ஆம் வயதில் காலமானார்கள்.




மேலும் பல இஸ்லாமிய பெரியார்களின் சரிதைகளை, எங்கள் இணையத்தளத்தில் வாசியுங்கள்:

www.mailofislam.com